Registered as a News Paper in Ceylon
P M G No. H A 59/300 of 1939,

# இந்துசாதனம்

விரோதி வருஷ (1889) ஆவணி மாதம் 28-ம் உ ஆரம்பமான

செவ்வாய் வெள்ளிதோறும் வெளிவருவது

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிளவேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே

[புத்-௬௩] யாழ்ப்பாணம்:- கர ஆவணி ௺ அ உ வெள்ளிக்கிழமை (24 ஆகஸ்ட் 1951) [இல. - ௬௬]

## "பாவமும் அறமதாகும்"

I

'பாவமும் அறமதாகும்' என்ற தொடர் மொழியைக் கண்டவுடன் வியப்பே யுண்டாகும். பாவம அறமானால் பாவமே செய்யலாம்! அறஞ் செய்வது எற்றக்கு? என்ற எண்ணங்கள் தோன்றும். யார் செய்யும் பாவம் அறமாகும்; எத்தகைய நிலையில் செய்த பாவம் அறமாகும என்பன பின்னர் விளங்கும். அறம் எது? பாவம் எது? இக்கேள்விக்கு விடைகாண்பது எளிதன்று. ஒரு நாட்டார் பாவம் என்று கொள்வதைப் பிறிதொரு நாட்டார் அறமென்று கொள்கிறார்கள். ஒரு காலத்தார் பாபம் என்று கொண்டதைப் பிறிதொரு காலத்தார் அறம் என்று கொள்ளுகின்றார்கள். தென்னாட்டு அந்தணர் மீன் உண்ணுவதைப் பாவம் என்று தள்ளுகிறார்கள், வடநாட்டுப் பிராமணர்கள் அது பாவம் என்று கொள்ளாது மீனையுண்கிறார்கள். பெண்டிரோடு கடல்வழி வெளிநாடு செல்வது பாவ மென்பது பண்டையோர் கொள்கை. இக்காலத்துப் பெண்டிரோடு கப்பலேறிச் செல்வதைப் பாவமாகக்கருதுவதில்லை. இவ்வாறு

வித்வான் செ. வெங்கடராமச் செட்டியார்
( தமிழ்ப் பேராசிரியர், *S. V. O.* கல்லூரி, திருப்பதி )

தேசவேறுபாட்டானும் காலவேறுபாட்டானும் அறம் பாவங்கள் மாறுபடுவதால் இதுதான அறம்; இதுதான் பாவம் என வரையறுத்துச் சொல்லுதல் அரிதே. எனினும் அடிப்படையான அறங்கள் இங்ஙனங் காலதேய வேறுபாடுகளால மாறுபடுவதில்லை.

'அறம' என்பது எது? என வள்ளுவரை வினவினால் "மனத்துக்கண் மாசிலனாதல் அனைத்தறம்" எனவும், "அழுக்கா றவாவெகுளி யின்னாச் சொல நான்கும் இழுக்கா வியன்ற தறம்" எனவும் விளக்கம் தருகின்றார். இதனால் மனத்துக்கண் நிகழும் குற்றமாகிய பொறாமை, ஆசை, கோபம், இவை யில்லாதிருப்பதும், மொழிக்கண் நிகழும் குற்றமாகிய கடுஞ்சொல இல்லா திருப்பதும அறம என்பது போதரும. ஆயின அவ்வள்ளுவப் பெருந்தகையாரே அறத்துப் பாலில் கொல்லாமை கள்ளாமை முதலியவைகளை அறமென ஓதியுள்ளமையால் அறம் என்னுஞ் சொற்குப் பொருள இன்னும் விரிவடைகின்றதைக் காணலாம். இங்ஙனம் மேலும்மேலும் விரிந்துகொண்டே செல்வதால அறம் பாவங்கட்கு இலக்கணம் சுருங்கிய சொல்லால் சொல்வதரிதாகின்றது. இந்நிலையை நினைந்தே பரிமேலழகர், "அறமாவது, மநு முதலிய நூல்களில விதித்தன செய்தலும், விலக்கியன ஒழிதலுமாம்" எனச் சுருங்கிய வாய்பாட்டால் விளக்கியுள்ளார். இவ்வாறு சொல்வது தவிர வேறு வழியில் சுருக்கச் சொல்லவியலாது. அவர் அற நூல்களுள் முதன்மையாகக் கொண்ட மநுதரும சாத்திரம் ஒரு குலத்திற்கு ஒரு நீதி கூறுவதால் இக்காலத்துக் குற

றம் கூறப்படுகின்றது. வள்ளுவர் நூலில் விதித்தன செய்தலும், விலக்கியன ஒழிதலும் அறம் என்று கொள்வது பொருத்தமாகலாம். தெய்வப் புலவர் திருவள்ளுவனார் விலக்கிய பாவங்களுள் கொலைப்பாவமே மிகப் பெரிய பாவமாகும். அப் பாவத்தினைச் செய்யாதிருத்தல் நல்லறமாகும என்பது அவர் கருத்து. 'ஒன்றாக நல்லது கொல்லாமை'' "அவிசொரிந் தாயிரம் வேட்டலின் ஒன்றன் உயிர்செகுத் துண்ணாமை நன்று" என்று விளக்கியிருத்தல் காண்க.

அக்கொலைப் பாவந்தானும் கொல்லப்படும உயிரின் அறிவிற்கேற்ப வருவதாகும். ஓரறிவுயிராகிய கீரையைக் கிள்ளிச் சமைத்துண்ணுதலும் ஐயறிவுயிராகிய ஆட்டினைக் கொன்று அதன தசையை மிசைதலும் ஒத்த கொலைப்பாவம் என்று எண்ணல் ஆமா? கீரையைக் கிள்ளுதலும் உண்ணுதலும் பாவமென்றே நாம் கருதுவதில்லை. உயிர்கள் என்ற பொது நோக்கால் நோக்கின் ஓரறிவுயிராகிய கீரையைக் கிள்ளுதலும பாவந்தானே! ஆடுமாடுகளை அறுத்

துப் புசிக்கின்றவர்களையே கொலைப் பாதகர்கள் என்கின்றனர். கீரையைக் கிள்ளிச் சமைத்துண்பவர்களை அப்படி என் சொலவதில்லை. கீரையும உயிருள்ள பொருளாயினும் பரிசவுணர்வு தவிர வேறு அறிவுகள் அதனபால் இல்லை. கிள்ளும்போது அக்கீரையின் துடிப்பும் துன்பமும கிள்ளுவோர்க்கோ பிறர்க்கோ வெளிப்படையாக விளங்குவதில்லை. ஆடு மாடுகள் ஐயறிவுடையன; அவற்றை

(தொடர்ச்சி 4-ம் பக்கம்)

## பள்ளிப்பிள்ளைகள் மத்தியான உணவு பணம் உதவப்படுமாம்

இதுவரையும் பள்ளிப்பிள்ளைகளுக்குக் கொடுக்கப்பட்டுவந்த இலவச மத்தியான உணவுக்குப் பதிலாக அவ்வுணவின் பொருட்டுப் பிள்ளைகளுக்கு மாதந்தோறும நன்கொடைப் பணமளித்தற்குப் பொக்கிஷப் பகுதியாரால் ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. இப்போது இலவச உணவுபெறும் பிள்ளைகளின் தொகை ஏறக்குறைய 800,000. எத்தனை பிள்ளைகள் இப்போது இலவச மத்தியான உணவு பெறுகிறார்களோ அத்தனை பிள்ளைகளுக்குமாத்திரம அவர்கள்பெறும் உணவுக்குச் செலவாகும பணத்தினளவாக மாதந்தோறும நன்கொடைப் பணம் உதவப்படும்.

இப் புதிய திட்டம் இலவச உணவு கொடுக்கும் முறையிலுள்ள தவறுகளை அகற்றிவிடுவதுமல்லாமல், அரினருக்கு மேலதிகமான செலவின்றிப் பிள்ளைகளுக்கு முன் கிடைத்ததிலும் பார்க்க நல்ல உணவு கிடைக்கக் கூடிய வழியையும் கோலிவிடும்.

பிள்ளைகளுக்கு வேண்டிய மத்தியானப்போசனத்தை ஆக்கிக்கொடுக்கும்படி கொடுக்கப்படும் நன்கொடைப் பணம் இனிமேற் பெற்றோரிடங் கொடுக்கப்படுமாம. பெற்றோருட் சிலர் புறத்தேயிருந்து கிடைக்கும பண உதவியின்றிப் பிள்ளைகளுக்கு மத்தியான உணவு தேடிக் கொடுக்கத்தக்க இயல்புள்ளவர்களாயிருக்கவில்லை. நன்கொடை பெறும் ஒவ்வொர் பிள்ளையும பள்ளிக்கூடத்துக்கு வரும் போது மத்தியான உணவு கொண்டு வருகிறதோவென அவ்வவ்வகுப்பு உபாத்தியாயர் மேற்பார்வை செய்வர். கொடுக்கப்படும பணத்துக்குத் தக்க பெறுமதியுள்ள உணவைப் பிள்ளைகளுக்கு ஆக்கிக் கொடுக்காது பணத்தை அபகரிக்கும பெற்றோர்களைபற்றி உபாத்தியாயர் வித்தியாபகுதிக்கு முறைப்பாடு செய்வர். கொழும்பு நகர சபையும இதுபோன்ற அல்லது சற்றே வித்தியாசமான ஓர் திட்டத்தைக் கைக்கொளக்கூடும்.

உ

## தோத்திரம்

பண் - தக்கராகம் (?) 

திருச்சிற்றம்பலம்

கறையார்மிட றுடையான்கமழ் கொன்றைச்சடை முடிமேல்
பொறையார்தரு கங்கைப்புன லுடையான்புள மங்கைச்
சிறையார்தரு களிவண்டறை பொழில்சூழ் திருவாலந்
துறையானவன் நறையார்கழல் தொழுமின்துதி செய்தே.

திருச்சிற்றம்பலம்

—திருஞானசம்பந்தசுவாமிகள்.

[நஞ்சாகிய கறைதங்கிய கண்டத்தினையுடையவனும், மணம் வீசும் கொன்றைமலர் அணிந்த சடைமுடியின்மேற் பாரமாகிய கங்கையைத் தரித்தவனுமாகிய இறைவனது திருப்புள்ளமங்கை என்னும் தலத்தில், சிறகுகளையுடையனவும் மது உண்டு களித்தனவுமாகிய வண்டுகள் சப்திக்கின்ற பொழில் சூழ்ந்த ஆலந்துறையானது தேன் பொருந்திய மலர் போலும் திருவடிகளைத் துதிசெய்து தொழுமின்கள் என்க]

## திருப்புள்ளமங்கைத் தலவரலாறு

திருப்புள்ளமங்கையென்பது காவிரி நதியின் தென்கரையில் உள்ள பதினுறாவது தலம். இத்தலத்திற் கோயிலின் பெயர் திருவாலந்துறை என்பது. ஆதலின் திருப்புள்ளமங்கைத் திருவாலந்துறை எனச் சேர்த்தே வழங்கப்படுதலும் உண்டு. திருவெண்ணெய்நல்லூர் அருட்டுறை, திருச்சாத்தமங்கை அயவந்தி, திருப்பெண்ணாகடம் தூங்கானைமாடம முதலியனவும தலப்பெயரும் கோயிலின் பெயரும் வேறு வேறு வழங்குவன காண்க.

இறைவர் விடம் உண்டு அருவ செய்த பதியாதலின் இப்பெயர் போந்ததென்பது வழக்கு. புள்ளமங்கை என்னும் பெயருக்கேற்பக் கோபுரத்தில கழுகுகள் நிலையாகக் குடிகொண்டுள்ளன என்பர். இத்தலத்தின் பொந்துகளில் எங்கும தேன் கூடுகள் காணப்படுகின்றன. இதனைப் பதிகத்துள் "பொந்தினிடைத் தேனூறிய பொழிலசூழ் புளமங்கை" எனப் போற்றியிருப்பது காண்க.

பிராமி, மகேசுவரி, கௌமாரி, வைணவி, வாராகி, மாகேந்திரி, சாமுண்டி என்னும் சப்த மங்கையர்களால் முறையே பூசிக்கப்பெற்ற சக்கரப்பள்ளி, அரிமங்கை, ஆலமங்கை, நந்திமங்கை, பசுபதிமங்கை, தாழமங்கை, புள்ள மங்கை எனனும் சப்த மங்கைத் தலங்களுள் இதுவும் ஒன்று.

தேவாரத் திருப்பதிகத்துள் "புளமங்கை-ஆலந்துறை" எனவும், "கலிபரனமலி மறையோரவர் கருதித் தொழுதேத்த" எனவும் போற்றியிருப்பதைச் சேக்கிழார் பெருமானும திருத்தொண்டர் புராணத்துள் "அருமறைப் புலனாஞ் சிந்தையார் புள்ளமங்கைப்பதி, குலவுமாலந் துறைக் கோயிலைக்கெய்தினர்" எனப்பாராட்டியிருப்பது காண்க. இத்தலத்திற்குத் திருஞானசம்பந்தசுவாமிகள அருளிய பதிகம் ஒன்றே யுள்ளது. சுவாமிபெயர் ஆலந்துறை நாதர். அம்மை பெயர் அல்லியங் கோதை.

இருப்பிடம்:- ஐயம்பேட்டை புகைரத ஸ்தானத்துக்கு மேற்கே முக்கால் மைல் திருச்சக்கரப்பள்ளி. அங்கு நின்றும் கற்சாலைவழி, மேற்கே ஒன்றேகால் மைல் சென்று வடக்கே திரும்பினுல் கால மைல் தூரத்திலுள்ளது.

—தருமபுராதீன
வெளியீடு - 243.

### உத்ஸவமும் பூரணபடலப்பூர்த்தியும்

தொல்புரத்தில் மடத்துப்பிள்ளையார்கோவிலில் எழுந்தருளியிருக்கும் விக்னேசுவரப் பெருமானுக்கு நிகழும் ஆவணிமாதம் 11ம் தேதி (27-8-51) திங்கட்கிழமை அலங்கார உற்சவ ஆரம்பமும் 20ம் திகதி (5-9-51) புதன்கிழமை விநாயக சதுர்த்தி அன்று திரு க. செல்லத்துரையின உபயமாக, புதிதாக அமைக்கப்பட்ட ரதத்தில், உற்சவமும, 21ம் தேதி வியாழன் சுத்த விரதப்படிப்பும் தீர்த்தோற்சவமும் 22ம் தேதி வெள்ளிக்கிழமை வள்ளியம்மன திருக்கல்யாணப் படிப்புப்பூர்த்தியும் நடைபெறும்.

- கடித.

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாம்அர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

# இந்துசாதனம்

யாழ். கர௵ ஆவணி௴ ௮௳ வெள்ளிக்கிழமை

## மாணவரின் மத்தியான இலவச உணவு

பள்ளிக்கூடங்களிற் படிக்குஞ் சிறுவர் சிறுமியர்க்கு மத்தியான வேளையில் அரசினர் தம்பொறுப்பில் இலவச ஆகாரத்தை என்று வழங்கத்தொடங்கினரோ, அன்று தொடக்கம் இன்றுவரையில் அந்த ஆகார முறை திருப்திகரமாக நடக்கவில்லையென்பதே பெற்றார்பிள்ளைகள் உற்றார் அறிந்தோர் முதலான எல்லாருஞ் சொல்லும் முறைப்பாடாகும். இங்குள்ள சிலவினுஞ்சில பள்ளிக்கூடங்களில் மாத்திரம் மத்தியானவுணவுக்குக் கொடுக்கப்பட்ட பணம் முழுவதும் ஆங்காங்குள்ள உபாத்தியாயர்களாற் பிள்ளைகளின் உணவுப் பொருட்டே உபயோகிக்கப்படுகின்றது; இன்னுஞ் சில வித்தியாசாலைகளிலுள்ள உபாத்தியாயர்கள், அரசினருதவும் பணத்தோடு தாமும் பணமிட்டுத் தம்மிடம் பயிலும் சிறுவர் சிறுமியர்கட்கு வயிறார உணவூட்டுவதை நாம் நேரில் அறிவோம்.

ஆனால், இந்த இலங்கையிலே இம் மத்தியான இலவசப்போசன விஷயமாக நேரும் அநர்த்தங்களோ பலவினும் பலவெனலாம். சில பள்ளிக்கூடங்களிலே உணவளிக்கும் பொறுப்பையேற்ற உபாத்தியாயர்கள், சிறுபிள்ளைகளின் மத்தியான ஆகாரத்திற்கெனக் கொடுக்கப்பட்ட செலவுப் பணத்திற் பாதியைத் தமக்காக்கிக்கொண்டு, பாதியை உணவாக்கச் செய்து பசியால் வருந்தும் பிள்ளைகளின் பாதிவயிற்றிற்கும் போதாவுணவைத் தாம் கொடுக்கிறார்களாம்; ஐயோ! பிள்ளைப் பேறற்ற பாவிகளென எள்ளப்படும் மலடர் தாமும் இப்படிச் செய்யமாட்டார்களே! வேறு சில வித்தியாசாலைகளிலே இந்தப் பணத்தைக் கொண்டு உணவை ஆக்குவித்து உபாத்தியாயர்கள் வயிறாரத் தாமும் உண்டு பிள்ளைகளின் பசியையும் ஒரு அளவிற்கு ஆற்றிவிட முயல்கிறார்கள்; இன்னுஞ் சில கலாசாலைகளில உபாத்தியாயர்களென்றிருப்போர், பிள்ளைகளின் உணவின் பொருட்டு அதிகாரிகளால் வழங்கப்படும் பணத்திற் கூடிய பங்கினைத் தாங்கள் அபகரித்துக்கொண்டு, எஞ்சிய போதாப் பணத்தைக்கொண்டுபொருந்தா உணவுப் பண்டங்களை வாங்கிச் சமைப்பித்து, பிள்ளைகளின் பசியை நீக்கத் தவறுவதோடு, பொருந்தா உணவினாற் பிள்ளைகட்கு வாரா நோய்களையும் வருவிக்க வழிதேடி விடுகிறார்கள்! இப்படியான அடாத செயல் கொழும்புமா நகரிலுள்ள பள்ளிக்கூடங்கள் சிலவற்றிற் சென்றவாரம் அதிகாரிகளாற் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இப்படிப்பட்ட இனரை, இரக்கமற்றாரை, மனச்சான்றைச் சாவக்கொன்று நடப்பவர்களை உபாத்தியாயர் என்று சொல்லலாமா? இந்த உபாத்தியாயனெனப்படுவோன் தன்னிடம் படிக்கும் பிள்ளைகளுக்கு ஐந்து பிதாக்களுள் ஒரு பிதாவல்லவா? இப்படிப்பட்ட உபாத்தியாயன், அரசினர் கொடுக்கும் பணம் பிள்ளைகளின் மத்தியான உணவிற்குப் போதாதெனக் கண்டால், தான் பெறுங் கொழுத்த சம்பளத்தில் ஒரு பகுதியை மத்தியான உணவுச்செலவாக உதவுதலன்றோ முறையாகும்! இப்படியான துரோகிகள் ஒருபோதும் யமன் தண்டனைக்குத் தப்பமாட்டார்கள்!

இவ்வாறாக, சிலரினுஞ் சிலரொழிய, பல உபாத்தியாயர்கள் தமமிடத்திற் படிக்குஞ் சிறு பிள்ளைகட்கு இந்த மத்தியான உணவு விஷயமாகச் செய்துவரும் அக்கிரமங்களை யுத்தேசித்துப்போலும், அரசினர் மத்தியான இலவச ஆகாரத்திற்கு, இதுகாறும் உபாத்தியாயர்கள் பொறுப்பில் உதவிவந்த பணத்தை, இனிமேற் பிள்ளைகளின் பெற்றார் பாதுகாப்பாளர் பொறுப்பில் உதவுதற்குஉத்தேசிக்கின்றனர். இது ஒரு தக்கஉபாயமென்றேசொல்லக்கிடக்கின்றது; தாமே தம் பிள்ளைகட்கு உணவும் உடையும் உதவி அப்பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்பக் கடமைபூண்ட பெற்றோர்கள், தம்பிள்ளைகள்பொருட்டு அரசினர்தருமமாகக் கொடுக்கும் பணத்தைப் பெற்ற பிள்ளைகட்குத் துரோகஞ் செய்து தாங்கள் ஒருபோதும் அபகரிக்கமாட்டார்களென்பது நிசம்; எங்களுடைய இந்தத் தமிழ் நாட்டிலே, யாழ்ப்பாணப் பெரும்பிரிவிலே ஏழைப் பெற்றார்கள் எத்தனையோபேர் தாங்கள் வயிறாரவுண்ணாது பட்டினி கிடந்துகொண்டு, ஆனவுடையின்றிக் கஷ்டப்பட்டுக்கொண்டு, படிக்கப் போகும் தங்கள் குழந்தைகட்கு வயிறார உணவூட்டி, நல்ல உடையுடுத்துப் பள்ளிக்கனுப்பிவைக்கிறார்கள்; பெற்றதாயுந் தகப்பனும் நாள் முழுவதுங் கூலி வேலை செய்து அலுத்தும், போதிய அன்னாகாரமின்றி இளைத்தும் தாம் பிள்ளைகட்குத் தம்மிடத்துள்ள தரித்திரத்தைக் காட்டாமல், அவர்களைப் படிப்பிக்க வேண்டுமென்ற ஆசையினால், சிரான்முறையிற் பள்ளிக்கூடத்திற்குக் கிரமமாக அனுப்பி வறுமையிற் செம்மையாய்க்காலங்கழித்து வருகிறார்கள்! இப்படிப்பட்ட பெற்றார்கள் தம் பிள்ளைகட்குஒருபோதும துரோகஞ் செய்யமாட்டார்கள்; ஆனதினால் அரசினர் இந்த மத்தியான இலவச போசன விஷயமாக இப்பொழுது செய்யக் கொண்ட நோக்கம் உத்தமமானது; ஆனால் அரசினர் சிந்திக்கவேண்டியதுஇன்னுமொன்றுளது; அவர்கள் இப்பொழுது கொடுத்துவரும் பத்துச்சதம் ஒரு பிள்ளையின் மத்தியான ஆகாரத்திற்குப் போதியதாகுமோ என்பதுதான்; போதாதெனக்கண்டால், செய்யும் புண்ணியத்தை அரைகுறையாகச்செய்யாது,பணவிகிதத்தைச் சிறிது உயர்த்திக் கொடுத்து இந்த அன்னதானத்தைப்பூரணமாக்குவார்களாக.

## கோண்டாவில் சைவப்பாடசாலை

### பெற்றார்தின விழா

மேற்படி பாடசாலையில் 1[illegible]-8-51 ந் திகதி மாலை 6 மணிக்கு மேற்படி விழா திரு. வே. வினாசித்தம்பி வழக்கறிஞர் தலைமையில் நடைபெற்றது. பாடசாலை மாணவர்களால் பெற்றார் முதியோர் மகிழ்ச்சியுறத் தக்கமயான பேச்சு, சம்பாஷணை, பாட்டு, கும்மி, நடித்தல் ஆகியாம் விஷயங்கள் நிகழ்த்தப்பட்டன. விசேட நடித்தலுக்காக அரசினர் தோட்டப் பகுதி மனேஜர் திரு. கே. துரைசிங்கம் பரிசு வழங்கினர். தலைவர் நடந்த விஷயங்களைக் குறித்தும பாடசாலைக் கட்டட நிதிக்குப் பெற்றார் வேண்டிய பணவுதவி புரியவேண்டுமென்றும் சிறந்த உபந்நியாசஞ் செய்தனர். ஈற்றில் திரு. மு. பெரியதம்பி தலைமை ஆசிரியர் சபையாருக்கு நன்றியுரை கூறினர்.

— கடித

## கொழும்பு நகரிற் பள்ளிப்பிள்ளைகள் மத்தியானவுணவு

இப்போது கொழும்புப் பட்டினத்திற் பள்ளிப்பிள்ளைகளுக்கு இனமாய்க் கொடுக்கப்படும் மத்தியான உணவு மனுஷர் உண்ணுதற்கு ஏற்றதல்லவெனக் கொழும்புச் சுகாதாரப் பகுதித் தலைமை வைத்தியர் குறிப்பிட்டனர். இவ்வுணவை உண்டாக்கிக் கொடுக்கும் சந்தை வியாபாரப் பகுதியார் (Marketing Dept.) உணவு இதமற்றதாயிருத்தற்குக் காரணம் உபயோகிக்கப்படுங் கோதுமைமாவேயெனச் சமாதானங் கூறுகின்றனர். ஒவ்வோர் பிள்ளைக்குங் கொடுக்கப்படும் உணவின் பெறுமதி பத்துச் சதமாகும். இதில் ஆறு சதம் மத்திரம் அரசாங்கத்தாலும் நாலுசதம் நகர பரிபாலன சபையாலும் உதவப்படுவதாம். 1951-52ம் ஆண்டில் பள்ளிப் பிள்ளைகளின மத்தியான உணவுக்கென ரூபா 10,000,000 அரசாங்கம் விதத்திருக்கிறது. நிகழும் ஆண்டுக்குரிய செலவுத் தொகை ரூபா 93,00,000 ஆகும். கொடுக்கப்படும் உணவுகீழ்த்தரமானதெனப் பல முறைப்பாடுகள் நகரசபைத்தலைவர் திரு. S. செல்லமுத்துவுக்கு அனுப்பப்பட்டமையால, அவர் உணவின் தரத்தை நயப்படுத்தற்கு உடனே ஒழுங்குகள் செய்யப்படவேண்டுமெனக் கட்டளையிட்டுளளார்.

## நீரில் அமுங்கிச் சாகவிட்டுப் பார்த்து நின்ற பாதகர்

பாணந்துறைக்கணித்தாகவுள்ள செல்வத்தை யென்னுங் கிராமத்தில் வசிக்கும் குஸ்மாவதியென்னும் 12 வயசுப்பிராயமுள்ள சிறுமி தண்ணீர் அள்ளும்போது தவறிக்கிணற்றுள் வீழ்ந்து விட்டாள்; அதனை வீட்டு யன்னல்மூலமாகக்கண்டதாய் ஓடிவந்து, மகள் நீருள் தத்தளிப்பதை நோக்கி ஓலமிட்டாள்; தாயிட்ட ஓலத்தைக் கேட்டு அந்த வீட்டுச் சொந்தக்காரனும் அயலாரும் அங்கே ஓடிவந்தார்கள்; வந்த வீட்டுச் சொந்தக்காரன் உடனே ஓடிப்போய் ஒரு கயிறைக் கையில் எடுத்துக்கொண்டு மீண்டு விரைந்து வந்தான்; ஆனல் அந்தக் கயிறு நீளம் போதாமையாற் பயன்பட்டிலது; இதற்கிடையிலே இன்னுமொருவன் ஓடிப்போய் நீளமான கயிறொன்றைக் கொண்டுவந்தானும்; ஆனல் ஒருவராயினும் அந்தக் கயிற்றுமூலம் இறங்கித் தத்தளிக்கும் பிள்ளையை மீட்க முயன்றிலராம். இங்ஙனமாக; வீட்டுச் சொந்தக்காரன் அந்த இடத்தைவிட்டு, குறித்த ஆபத்துச் செய்தியைத் தெரிவிக்கும்படி அக் கிராமத் தலைமைக்காரனிடம் போய்விட்டானும்; அவன் மீண்டு வந்தபோதும் சிறுமி நீரிலே தத்தளித்தபடி கத்தினளாம்; எல்லாருஞ் சும்மா நின்றதனால் மகள் படும பரிதாபத்தைக் கண்டு, பெற்றவள் அறிவு சோர்ந்து நிலத்தில் வீழ்ந்து விட்டாள்; கடைசியில ஒருவர் ஓடி வந்து கிணற்றுளிறங்கி அந்தச் சிறுமியைப் பிரேதமாகக் கண்டெடுத்துப் புறத்தே கொண்டுவந்து வளர்த்தினர்; அரைமணிநேரம் அப்பெண் உயிர் நீங்காது தத்தளித்து அதன்பின்பே மாண்டாளாம். பிரேத விசாரணை செய்த அதிகாரி வீட்டுச் சொந்தக்காரனை நோக்கி "நீ கிணற்றுள் வீழ்ந்து தத்தளிக்கும் பெண்ணை மீட்பதை விடுத்துத் தலைமைக்காரனுக்குச் சொல்வதற்கு ஏன் ஓடிப்போனாய்" என்று கேட்டபோது, தலைமைக்காரனுக்குத் தெரிவிப்பது தான் முதற்கடமை யென்றானும்.

## நீர்கொழும்பில் மட்பாண்டத் தொழிற்சாலை சமீபகாலத்தில் நிறுவப்படுமாம்

அரசினர் ஓர் புதிய மட்பாண்டத் தொழிற்சாலையைநீர்கொழும்பில் நிறுவுதற்கு வேண்டிய கட்டடங்கள் அமைத்தற்கான ஒழுங்குகளைச்செய்திருக்கின்றனர். தேவையான நிலமும்வாங்கப்பட்டுவிட்டது. முதல் தரமான புதுமுறையான யந்திரங்கள் பிரித்தானியாவிலிருந்து வருவிக்கப்படுகின்றன.

இத் தொழிற்சாலையின் மிக்க உயர்தரமான பாண்டவகைகள்உள்ளூர்த் தேவைக்குப் போதிய அளவிற்கு உண்டாக்கப்படுமாம். பழையபாண்டத் தொழிற்சாலையில் அமர்த்தப்பட்டிருக்க தொழிலாளர்களிலும் பார்க்க மிக்க தொகையினர் புதிய தொழிற்சாலையில் அமர்த்தப்படுவர். வனைதற்றொழிலில் நிபுணராகிய திரு. நீற்ஸ் எனபவர் இத்தொழிற்சாலைக்கு முகாமைக்காரராய் நியமிக்கப்பட்டிருக்கின்றனர்.

## நமது கலை நிலையம்

**விநாயகரகவல்**

இது ஔவையார் அருளிச்செய்தது; இத்தோத்திரப் பிரபந்தம் சைவநன்மக்களால் விநாயகக் கடவுளின் அருளைவேண்டிக் கிரமமாக ஓதப்படுவது; இதற்கு சித்துபூத்துறைப் பழைய தாசில்தார், திரு. மா. வே. செல்லையப்பிள்ளை B. A. ஒரு சிறந்த விரிவுரை யெழுதியுள்ளார்; பாராயணஞ் செய்வோர்க்கு இவ்வுரை பயன்படும்; பிரதிகள் தெளிவான அக்கரங்களில் நன்கு அச்சிடப்பெற்றுள்ளன. விலை அணு 5. (31 சதம்); பெறவிரும்புவோர் குகன் அச்சுக்கூடம், 135. இபிருகிம் சாகிப் தெரு. பங்களூர்-1 என்னும் விலாசத்திற் பெற்றுக் கொள்ளலாம்.

O

**இந்து இளைஞன் (குலசிங்க மலர்)**

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் 31 ஆண்டுகளுக்கு மேல் விஞ்ஞான சாஸ்திர ஆசிரியராகத் திறம்படக் கடமையாற்றி இப்பொழுது இளைப்பாறும் திரு. C. M. குலசிங்கத்தைப்பற்றிய பாராட்டு மலராக, மேற்படி கல்லூரி மாணவர்களின் முயற்சியால் நன்கு தொகுத்த இச்சைவப்பிரகாச யந்திரசாலையில் அழகுற அச்சிட்டுக் கட்டி வெளியிடப்பட்டுள்ளது. இதன்கண் திரு. குலசிங்கத்தின் பேச்சு, இக்கல்லூரிப் பிரதமரின் குறிப்பு, மாணவர்கள் பலர் எழுதிய வியாசங்கள் வாழ்த்துப் பா என்னு மிவைகள் அடங்கியுள்ளன.

O

**தேவாரப்பண்முறைக்கட்டளை விளக்கம்**

இது கொற்றவன் குடி உமாபதி சிவாசாரியர் அருளிய முறைப்படி, காரைக்குடி, தேவாரம் திரு. அ. நடேசதேசிகரால், நுண்ணிய முறையில் இனிது தொகுத்த அழகிய புத்தகவடிவமாக,வெளிவந்துளது. இவ்வெளியீடு தமிழ் மறை யோதுவார்க்குப் பெரிதும் பயன்படத்தக்கது.

எமது பார்வைக்கனுப்பிய பிரதிகளின் பொருட்டு அனுப்பியவர்கட்கு நன்றி கூறுகின்றோம்


**வியாபாரத்திற் கழகு**

**விளம்பரஞ் செய்தல்**



L K·S LEBBAY BROS
GOLD HOUSE

தற்காலத்திற்கேற்ற
நல்ல வாட்சிகள் கிடைக்குமிடம்
எல். கே. எஸ். லெப்பை பிரதர்
தங்கமாளிகை
கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.


## துணிகரமான களவு

இலங்கையிலுள்ள இந்திய உயர்தானிகராலய விசாரணைக்கர்த்தாவாகிய திரு. கேசவமேனன் இல்லத்தில் சென்ற திங்கட்கிழமை (20-8-51) இரவு, முகமூடியிட்ட இருதிருடர் புகுந்து 1500/ ரூபா பெறுமதியான ஆபரணங்களையும், சேலை முதலியவற்றையும் திருடியதோடு அவருடைய மனைவியாகிய ஸ்ரீமதி லீலாவுக்கு மயக்கு மருந்தால் மூர்ச்சையாகச்செய்துவிட்டுத் தப்பி ஓடிவிட்டனர். 3 வாரத்திற்கிடையில் குறித்த அயலிலும் 2 துணிகரமான களவுகள் நிகழ்ந்துள்ளதாம். விசாரணைப்போது ஸ்ரீமதி லீலாவின் வாய்ப் பிறப்பு, "நாங்கள் குடும்பத்தோடு பயணஞ் செய்து அனுராசபுரத்திலிருந்து பொழுதுபட்டபின்தான் வீடுவந்து சேர்ந்தோம். அனுப்பினும் வழக்கத்திற்கு முந்தியே படுத்துறங்கினோம். நடுச்சாமத்தில் என் அறையுள் யாரோ திருடர் புகும் அரவங் கேட்டு விழித்தபின்பு கத்தினேன். இதற்கிடையில், காக்கி உடை தரித்து முகமூடி இட்டுக்கொண்டு புகுந்த திருடர் இருவருள் ஒருவன் என்னைப் படுக்கையிற் கிடக்கத் தள்ளிவிட்டு என் முகத்தில் ஏதோ தெளித்தான். என் அறிவு கெட்டமையினால் அதன் பின் நடந்ததை அறியேன். அரைமணி நேரத்தின்பின் மயக்கம் நீங்கி அறிவு வந்தபோது என் கழுத்திலிருந்த நகைகளும், வேறு ஒன்பது பட்டுச் சேலைகளும் காப்புகளும், என் குழந்தைக்கிட்டிருந்த சிறு நகைகளும களவுபோனதை உணர்ந்தேன். ஆபரணங்களின் பெறுமதி 1500 ரூபாவரையிலிருக்கும். சில சேலைகள மாத்திரம் இட்ட இடத்தில் இருந்தன" இத்திருடரைக் கண்டு பிடிப்பதற்குப் பொலிசார் பெருமுயற்சி செய்கின்றனர்

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோடு
சுன்னாகம் மேற்கு
கார்த்திகேசு ஐயம்பெண் வள்ளியம்மை
வழக்காளி

இல. 7297
சாவகச்சேரி மேற்கு
கந்தர் கணபதிப்பிள்ளை ஐயம்பெண்
பாறுபதி இவளின் காலஞ்சென்ற
புருஷன் கந்தர் கணபதிப்பிள்ளையின்
சுதந்திரங்களுக்குத் தத்துவகாரன்.
எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டு 7297-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் துண்டுக் காணியை 1951-ம் ஆண்டு புரட்டாதி மாதம் 14-ந் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 4 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை ரூபா 1179-50 இதில் ரூபா 1000/=க்கு 21-11-50 தொடக்கம் 13-2-51 வரைக்கும் வருடமொன்றுக்கு நூறுக்கு 6 வீத வட்டியும் அதன் பின் 13-2-51 தொடக்கம் இறுக்கும் வரைக்கும் 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 293-50.

காணி விபரம

சாவகச்சேரி பகுதி ...... இறை வில்லெனவும் அளவுபடத்தின்படி செற்பரப்பு 12 குழி 5½ எல்லை கிழக்கு சண்முகம் சுந்தையா வடக்கு சுந்தையா பெண் சரஸ்வதி மேற்கு இராமநாதர் ஆறுமுகம் தெற்கு நிலையம்பலம் முருகேசு, இதுகளுமாம்.

ஆ. ச. கந்தையா
A. S. Kandiah
சாவகச்சேரி, 2-8-51.
கொமிஷனர்.

M 84 24—8—51.

## மாணவர்களிடம் பெறும் வேதனம் (facilities fees) கவிர்க்கப்பட வேண்டுமாம்

திரு. N. அருணம்பலத்தின் தலைமையில் நடைபெற்ற வட இலங்கைச் சமூக சேவைச் சங்கத்தின் கூட்டமொன்றில், இப்போது மாணவர்களிடம் புதிதாய் அறவிடப்படுவதாகிய சௌகரியச் சம்பளத்தை (facilities fees) நிறுத்திவிடும்படி கல்விப்பகுதி மந்திரிக்கு மனுச்செய்ய வேண்டுமென திரு. T. P. சம்பந்தன் பிரேரித்தனர்.

## தோட்டப் பாடசாலைகளை அரசினர் ஏற்று நடத்தல்

வித்தியாசட்டத்தைகணங்க நடைபெறும் சகல தோட்டப்பாடசாலைகளையும் சமீப காலத்தில் கல்விப்பகுதியார் கையேற்று அரசினர்பாடசாலைகளாக நடத்துவரென அறியப்படுகிறது. வித்தியாதிட்டத்தைப் பூரணப்படுத்தும் நோக்கமாகவே இம்முகாமை மாற்றம் செய்யப்படுகிறதாம். தோட்டப் பாடசாலைகளின் தொகை மதிப்பெடுத்ததின் பேறாகவே அவைகள் அரசினர்பாடசாலைகளாகமாறவேண்டுமென்ற நோக்கம் உண்டானதாம்.

வலிகாமம் மேற்கு

### தமிழாசிரியசங்க விடுமுறைக் கழகம்

ஷ கழகம் 11-8-51 சனிக்கிழமை காலை 9-30 மணியளவில் சுழிபுரம் அரசினர் விக்ரோறியாக்கல்லூரியில் தலைவர் திரு. மு. சதாசிவம் தலைமையில் நடைபெற்றது. முதலில் உதவி வித்தியாதிபதி திரு. S.P. சற்குணன் சங்க இலச்சினை பொறித்தகொடியை, ஏற்றிவைத்தார். சுழிபுரம் வடக்கு அ.மி பாடசாலை மாணவர்கள்செய்து காட்டிய கைப்பணி பார்வை செய்யப்பெற்றது. பின்னர்த்தலைவர்முன்னுரை நிகழ்த்தினர். திரு. S. P. சற்குணன் கழகத்தைத்திறந்துவைத்துப்பேசியபோது, சுயபாஷா பாடசாலைகளின் வாய்மை உயர்த்திவைத்து, மகத்தான பணி புரியவேண்டுமென வற்புறுத்தினர். அடுத்ததாகப் பலாலி அரசினர் ஆசிரியகலாசாலை அதிபர் திரு. P. சவரிமுத்து M. P. "கல்வியிற் சமசந்தர்ப்பம்' 'என்னும் பொருள்பற்றிப் பேசினர். உடுப்பிட்டிப்பெண்கள கல்லூரிஅதிபர் ஸ்ரீமதி லீ. வள்ளியசிங்கஅம்மையார் "மாணவருக்கேற்றகல்வி" எனனும் பொருள் பற்றி அநுபவசாத்தியமான பிரமாணங்களோடுபேசினர். அவ்வளவில் அதிபர் தலைமையாசிரியர்களோடு கலந்துரையாடினர் பண்டிதை S. அமிர்தாம்பிகை அம்மையார் "ஆங்கில தமிழ் இலக்கியங்கள" எனும் பொருள் பற்றி ஆராய்வுடன் பேசினர். வட்டார வித்தியாதரிசி திரு. V. துரைசிங்கம் சங்க ஒழுங்கு நடைகள்பற்றிய குறிப்புரை கூறினர். ஈற்றில் காரியதரிசி திரு. ச. அரியரத்தினம் நன்றியுரை கூறினர்.


இலங்கையின் மிகப் பெரிய
— நகை —
வியாபாரிகள்
= O =
தந்தி: "JEWELLERS"
போன்: 161.
ஸ்தாபனம்:
63, கன்னாதிட்டி,
யாழ்ப்பாணம்.


# நமது சோதிடப்பகுதி

ஸ்ரீ ராதாகிருஷ்ணன் கணிப்பது

### உங்களுக்குரிய இந்தவாரப் பலன்கள் (26-8-51—1-9-51)

**மேடராசி** அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்.

தேக சுகவீனம் - பிரதானமாய் வயிற்றுக் குழப்பம் நேரக்கூடும்; சிநேகருக்கிடையே பிணக்கு, உத்தியோகத்திற் சங்கடம் முதலியன நேருதல் கூடும்; எழுத்தில் எவ்வகையான பொறுப்பும் கொடுக்க வொண்ணாது; பிரதான கருமங்களை இப்போதைக்குத் தவணையிடுக.

**இடபராசி** கார்த்திகை 2, 3, 4-ம்கால்கள் ரோகிணி, மிருகசீரிடம் 1, 2-ம் பாதம்

குடும்பத்திற் சில சங்கடமும், வாகனுதிகளாற் செலவும் நேரக்கூடும். உத்தியோக விஷயத்திற் சுகமுண்டு; ஆண்பாலாராற் பெண் பாலார்க்கும், பெண்பாலாரால் ஆண்பாலார்க்கும் உதவியுண்டு.

**மிதுனராசி** மிருகசீரிடம், 3, 4, திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3,

இவ்வாரத்தில் நண்பர்களால் பெரும் உதவியுண்டு. புதுக் கருமங்களில் சாதுகூலமும், பண லாபமும் உண்டு. கிழமை முடிவிற் சகோதரர்களால் நன்மையுண்டு.

**கடகராசி** புனர்பூசம் 4-ம் பாதம், பூசம், ஆயிலியம்.

உத்தியோகத்தில் அற்ப பிணக்கும் உடம்பில் அற்ப சுகவீனமும் நேருமேயொழிய ஏனைய எல்லாம் நன்மையாகும் புது முயற்சியிற் சித்தியுண்டாம்; சத்துருக்களுக்கு அழிவும், தனக்குப் புகழுமுண்டாம்.

**சிங்கராசி** மகம், பூரம், உத்தரம், 1-ம் பாதம்.

இவ்வாரத்தில் வரவுக்கு மேற்பட்ட செலவு நேரும். மித்திரராலும், சுற்றத்தாராலும் மனஸ்தாபமும் இடைஞ்சலும் நேரும். தேகத்தில் ஏதும் இடையூறுமுண்டாம்.

**கன்னிராசி** உத்திரம் 2, 3, 4-ம் பாதம் அத்தம், சித்திரை 1, 2-ம் பாதம்.

பார்க்கும் கருமங்களுக்கு அநுகூலமான வாரம், நிலம் புலத்தாலும் சகோதரர் வருவாயுண்டு. வாரமுடிவில் அற்ப சுகவீனம் நேரக்கூடும்.

**துலாம்** சித்திரை 3, 4-ம் பாதம் சுவாதி விசாகம் 1, 2, 3-ம் பாதம்.

கிழமை முதலுவிற் சாவதானமாக நடந்து கொள்ளவும்; விபரீத விளக்கமும் பிணக்கும் நேரக்கூடும். எஞ்சிய நாட்களிற் புதுக் கருமங்கள் தொடங்கலாம்; ஆனால் உடனுக்குடன் பயன்றரா.

**விருச்சகராசி** விசாகம் 4-ம் பாதம் அநுஷம், கேட்டை.

வாரத்தின் மூன்று நாட்களிலும் அவதானமாக நடந்துகொள்க, விபரீத விளக்கமும், பிணக்கும், உத்தியோகத்திற் சங்கடமும், மனச் சஞ்சலமும் இம்மூன்று நாளுமுண்டு; எஞ்சிய நாட்கள் நல்லன.

**தனுராசி** மூலம் பூராடம் உத்தராடம் 1-ம் பாதம்.

பார்க்குந் தொழிலுக்கும் உத்தியோகத்திற்கும் முதல் மூன்று நாட்களும் அநுகூலமானவை, புதன்கிழமை தொடக்கம் வெள்ளிக்கிழமை முற்பகல்வரை அவதானமாக நடந்துகொள்க. வாரமுடிவில் நன்மையுண்டாம்.

**மகராசி** உத்தராடம் 2 3 4-ம் பாதம் திருவோணம், அவிட்டம் 1, 2-ம் பாதம்

சஞ்சலத்தோடுகூடிய வாரம் நினைத்த கருமங்கள் இலகுவில் நிறைவேறா. குடும்பத்திற் பிணக்குண்டாம். வெள்ளிக்கிழமைபிற்பகல்தொடக்கம் சனிக்கிழமை முழுவதும் அதிகஷ்டகாலம்.

**கும்பராசி** அவிட்டம் 3, 4-ம் பாதம் சதயம், பூரட்டாதி 1-ம் 2 ம் 3 ம் பாதம்

குடும்பத்திற் சில சங்கடங்கள் நேருமெனினும் இவ்வாரம் நன்மையோடு கூடியதாகும். பார்க்கும் கருமத்திற் சித்தியுண்டாம். பிறரால் பொருள் வரவும் புகழும் உண்டு.

**மீனராசி** பூரட்டாதி 4, உத்தரட்டாதி, ரேவதி.

இவ்வாரத்தில் எதிரிகளை வெல்லலாம். புது முயற்சியால் இலாபமுண்டு. வாரமுடிவிலே ஆண்களைப் பெண்களும் பெண்களை ஆண்களும் கவரி நடக்க வொண்ணாது.

# ரேடியோ

## ❊ இசைத்தட்டு

### திருச்சி சனி ஆகஸ்ட் 25

காலை 7 10 ஆரம்பம் 7 15 தமிழில் செய்தி 7 30 கே ஆர் கிருஷ்ணசாமி ராவ் பாட்டு 8 ஆங்கிலத்தில்செய்தி 8 15 சித்ரகானம்* 8 30 முடிவு.

1 நீங்கள்கேட்டவை* 1 30 ஆங்கிலத்திற்செய்தி 1 40 ஹிந்தியில்செய்தி 1 50 டி கே பட்டம்மாள்* 2 தமிழில்செய்தி 2 10 சித்ரகானம் * 2 45 முடிவு.

மாலை 5 30 கிளாரினெட் ஆ இ ரே வித்வான் 5 45 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில்செய்தி 6 10 அறிவிப்புகள் 6 15 ரேடியோவாத்தியகோஷ்டி* 6 30 கிராமநிகழ்ச்சிகள் 7 15 தமிழில்செய்தி 7 30 சித்ரகானம் 7 45 எம் எல் வசந்தகுமாரி பாட்டு 9 ஆங்கிலத்தில்செய்தி 9 15 கவிச்சொல்வேளீர் 9 30 ஜகந்நாத் ஜகப்பக்வாஜ் ஒலிப்பதிவு 10 முடிவு.

### திருச்சி ஞாயிறு ஆக 26

காலை 7 10 ஆரம்பம் 7 15 தமிழில் செய்தி 7 30 இசைச்சுவடி ஒலிப்பதிவு 8 ஆங்கிலத்தில்செய்தி 8 15 சித்ரகானம்* 8 30 முடிவு.

12 சித்ரகானம்* 12 30 சூர்யகாந்தி குடும்பநிகழ்ச்சி 1 மணிமலர் 1 30 வாத்ய இசை* 1 40 ஹிந்தியிலசெதி 1 50 கே வி சேசபாகவதர்* 2தமிழில்செய்த 2 10 பெண்ணுலகம் 2 30 செண்டு நிகழ்ச்சி 3 முடிவு.

மாலை 5 30 கடத்தூர் சங்கராமய்யர் வீணை 5 45 ஆர் உதயசங்கர் பாட்டு 6 05 அறிவிப்புகள் 6 10 நீங்கள்கேட்டவை* 6 30 கிராமநிகழ்ச்சிகள் 7 15 தமிழில்செய்தி 7 30புதியவெளியீடுகள்* 7 45 ரேடியோ அறிமுகம் 8 கே. என். தனம் அம்மாள் பாட்டு 9 ஆங்கிலத்திற் செய்தி 9 15 கடத்தூர் சங்கராமய்யா வீணை 10 முடிவு.

### திருச்சி திங்கள் ஆக 27

7 10 ஆரம்பம் 7 15 தமிழில்செய்தி 7 30 டி என் மரியானந்தம் பாட்டு 8 ஆங்கிலத்தில்செய்தி 8 15 சினிமா பாட்டுகள் * 8 30 முடிவு.

12 30 உயர்தரப்பள்ளிகளுக்கு 1 நீங்கள் கேட்டவை * 1 40 ஹிந்தியில செய்தி 1 50 திருவெண்காடு சுப்ரமணிய பிள்ளை நாகஸ்வரம் * 2 தமிழில் செய்தி 2 10 நாதமுனி பாண்ட் * 2 15 உயர்தரப்பள்ளிகளுக்கு 2 45 முடிவு.

மாலை 4 ஆரம்பப் பள்ளிகளுக்கு 4 30 முடிவு.

5 30 மதுரை ஜே. ராமய்யா வயலின் 5 45 இசைப்பயிற்சி 6 05 அறிவிப்புகள் 6 10 திருச்சிவாத்யகோஷ்டி 6 30 கிராம நிகழ்ச்சிகள் 7 15 தமிழில செய்தி 7 30 சித்ரகானம் * 7 45 பூச்சிகளின் தொல்லை 8 மதுரை ஜே ராமய்யா வயலின் 8 30 அலர்மேலுமங்கை * 8 45 ஆங்கிலப் பேச்சு 9 ஆங்கிலத்தில் செய்தி 9 15 டி என் மரியானந்தம் பாட்டு 10 முடிவு.

### திருச்சி செவ்வாய் ஆகஸ்ட் 28

காலை 7 10 ஆரம்பம் 7 15 தமிழில் செய்தி 7 30 வேட்டனூர் டி என் மதுரம் சகோதரிகள் பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்தி 8 15 சித்ரகானம் * 8 30 முடிவு.

12 30 உயர்தரப் பள்ளிகளுக்கு 1 இசைவேளை * 1 40 ஹிந்தியில செய்தி 1 50 குரல்வளை * 2 தமிழில் செய்தி 2 10 செம்பை வைத்தியநாத பாகவதர் * 2 15 உயர்தரப் பள்ளிகளுக்கு 2 45 முடிவு.

மாலை 4 ஆரம்பப்பள்ளிகளுக்கு 4 30 முடிவு.

5 30 திருவாரூர் எஸ் வைத்தியநாதன் நாதஸ்வரம் 5 45 இசைப்பயிற்சி 6 05 அறிவிப்புகள் 6 10 வேட்டனூர் டி என் மதுரம் சகோதரிகள் பாட்டு 6 30 கிராம நிகழ்ச்சிகள் 7 15 தமிழில் செய்தி 7 30 ஆதிராத் * 7 45 வேலூர் மீனாக்ஷிசுந்தரம்பிள்ளை பாட்டு 9 ஆங்கிலத்தில செய்தி 9 15 திருவாரூர் எஸ் வைத்தியநாதன் நாதஸ்வரம் 10 முடிவு.

## தவறிவிட்டது

சென்ற செவ்வாய்க்கிழமை (21-8-51) இந்துசாதனப்பிரசுரத்தில் வெளிவந்த யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபைப் பொதுக் கூட்டவரலாற்றில் திரு. இ.பொ. இராசையாவே பழையபடிசபைத் தனாதிகாரியாகத் தெரிவு செய்யப்பட்டனர் என்பதை எடுத்துக் காட்டத் தவறியமையையிட்டுப் பச்சாத்தாபப்படுகிறோம்.

## பாவமும் அறமதாகும்

1-ம் பக்கத் தொடர்ச்சி

வெட்டும்போது கதறியும் அழுதும் துடித்தும் தம் துன்பத்தை வெளிப்படையாகக் காட்டுகின்றன. சொல்லப்படும் அவற்றின் துன்பம் எனைத்தென்பதைப் பலரும் அறியவியலுகின்றது. எனவே ஐயறிவுயிராகிய ஆட்டினையறுப்பதற்கும் ஓரறிவுயிராகிய கீரையைக் கிள்ளுவதற்கும் வேறுபாடு பெரிதுண்டு. முன்னது கொலைப் பாவம் தருவதெனவும் பின்னது அன்னதன்று எனவும் எண்ணினர் சான்றோர். உயிரின் அறிவு மிகுதிப்பட மிகுதிப்பட அவ்வறிவு மிக்கவுயிரினைக் கொல்லும் பாவமும் பெரிதாதலை இதுகொண்டறியலாம்.

ஐயறிவினையுடைய பறவை விலங்குகளைக் கொல்லும் பாவத்தினும் அவற்றினும் மேம்பட்ட ஆறறிவுடைய மக்களைக் கொல்லும் பாவம் மிகப் பெரியதாகும். மக்களுடைய அறிவும் ஒரு தன்மையதாகவின்றி, ஏற்றத் தாழ்வுகளையுடையது என்பதை யாவரும் அறிவர். குறைந்த அறிவுடையவனும மக்களுள் ஒருவனே எனினும் அவனைக் கொன்ற பாவத்தைக் காட்டினும், நிறைந்த அறிவுடைய அருளாளன் ஒருவனைக் கொன்ற பாவம் மிகப்பெரியதாகும். மக்களுக்கெல்லாம் அன்பு நெறியை அறிவுறுத்திய அண்ணல் காந்தியடிகளைக் கொன்ற பாவமும் கொலைப் பாதகனாகிய கோட்சேயைக்கொன்ற பாவமும் ஒருதன்மையதே என எவரேனும எண்ணுவாரா? இருவரும மக்கட் பிறப்பினரே எனினும அவரைக் கொன்ற பாவங்கள் மிகுதியுங் குறையுமாக வேறுபடுகின்றன என்பதை யாவரும் ஏற்றுக் கொள்வர்.

கொலைப்படும் உயிரின் அறிவு மிகுதிக்கேற்பக் கொலைப்பாவம் மிகுதிப்படுதல் போலவே, கொலை செய்பவரின் அறிவு மிகுதிக் கேற்பவும் கொலைப் பாவம மிகுதிப்படும். 'கொலை செய்வது பாவம்' என்பதையறியாத ஒரு வேடன் கொலை செய்வானாயின், அவன் அறியாது செய்தமையால் அவற்கு வரும் பாவம் குறைவானதே. கொலை செய்வது பெரும் பாவம என்பதை நூற் கேள்வியால் நுண்ணிதின் உணர்ந்தவைத்தும் ஒருவன் கொலை செய்வானாயின் அவனுக்கு வரும் பாவம் மிகப் பெரியது. அப்பாவம் அறிந்து செய்ததாகலின் மன்னிக்க முடியாத பாவமாகும். இந் நெறியால் நோக்கின் அறிவிற்பெரிய ஒருவனை அறிவிற் சிறந்த மற்றொருவன் கொன்றால் அவனுக்கு வரும் பாவம் மிகமிகப் பெரிதாகும். அத்தகைய பெரும் பாவம் அறமாகுமாயின் அதுவே வியப்பினும் வியப்பாகும். ஒன்பேசுகர் செய்த கொலைப் பாவமே அத்தகைய பெரும்பாவம். அப்பெரும் பாவமே அறமாகிப் பயன் தந்தது என்றபடி என்பதைக் காணலாம்.

## யானையிடத்துள்ள காருண்ணியம்

யானையின் அபூர்வ புத்தியால் மூன்று வயதுள்ள ஓர் சிறுவன் அதன் காலில் அகப்படாது அரிதில தப்பினான்: சென்ற வாரம் நிகழ்ந்த கண்டிப் "பெரஹரா" திருவிழா (Perahera) முடிவில் யானைகள் தேவாலயத்திற்குக் கொண்டுபோகப்பட்டபோது ஒருத்தி ஓர் யானைக்கு வழி விலகும் அவதியில் தனது மூன்று வயதுப் பிள்ளையை நழுவவிட்டுவிட்டு ஓடினாள், வழியிற்பிள்ளை கிடப்பதைக் கண்ட யானை தன் கதியைக் குறைத்துப் பிள்ளையை மிதித்துக் கொல்லாது விலகிச் சென்றது. யானை அவதானமின்றிச் சென்றிருக்குமேல பிள்ளை நிச்சயமாய் உழக்குப்பட்டு இறந்திருக்குமாம்.

## அம்பாறையில் மீண்டும் தீயினுற் சேதம

சென்ற வாரம் அம்பாறையின் சாலாம் குறுக்குத்தெருவிலுள்ள ஓர் வீட்டில் தீப் பற்றினமையாற் சில வீடுகள் எரிந்துவிட்டன. யாதும் சேதம் விளையுமுன் நெருப்பை அவித்தல் அசாத்தியம பிறறு. இடையிடையே நெருப்பினால் சேதம உண்டாதினால் நிடுகால் வேயப்பட்டிருக்கும வீடுகளை யாவறறிற்கும் "தன் பென்ரோஸ்" என்னும் நெருப்புப் பற்றாத தகட்டால் கூரையிடத் தீர்மானம்செய்யப்பட்டிருக்கிறது. இடுக்குக் கூரையுள்ள வீடுகளில வசிப்போர் அவ்வீட்டுக்கூரைகளைமாற்றி அமைத்தற்பொருட்டு வருகிற செப்டெம்பர் மாதம் 1 ந் தேதி தொடக்கம் இரு வாரங்களுக்குத் தங்கள் வீடுகளை விட்டு விலகியிருக்கும்படி கேட்கப்படுகின்றனர்.


வந்திருக்கின்றன! வந்திருக்கின்றன!!

# திறமான தேக்கமரங்கள்

பல திசைகளிலும் வந்திருக்கின்றன

தேவைப்படுவோர் உடனே ஆடர்செய்யவும்

சேகரம் & சன்ஸ்

74 ஆஸ்பத்திரி ரேட்

Std 2 யாழ்ப்பாணம்



# யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி

1918-ம் ஆடு ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூல்நிதி 8 லட்சம் ரூபா.

இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணக்ரூபா

134,3670

100 ரூபா விகிதமான 8000 பங்குகள்

பங்குப்பணங் கட்டுமுறை.

மாசமொன்று 1 ரூபா விகிதமாக 75 மாசகாலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

தினசரிப் பற்றுவரவு

எசசந்த சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானால் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப்பணம்

க்ஷேமப்பணம் 3 மாசம, 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும், தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இந்தியாநோட்டு வட்டத்திறகு மாற்றிக்கொடுக்கப்படும்.

க ட ன்.

நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 12 விகிதம் அறவிடப்படும். (ஈடுவைத்தவர்கள்) முதலையும் பாகம்பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்

S. கனகசபை
கிருப்பர்.

Std 14 20-11-46—20-11-49


Printed and Published by S. P. Kandiah, F. I. S. A. (Lond) residing at 245, Navalar Road, Jaffna, for and on behalf of the Proprietor: the Saiva Paripalana Sabai, Jaffna, at their Press, the Saiva Perakasa Press, Vannarponnai, Jaffna, on Friday August 24, 1951